மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே போக வேண்டாம். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே போக வேண்டாம். அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.

2. கவன ஈர்ப்பு

வால்பாறை, காட்டு விலங்குகளால் மனித உயிர்கள் பலியாவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், இருக்கையில் இல்லை. திரு. சு. குணசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வால்பாறையில் வன விலங்குகளினால் ஏற்படும் தாக்குதலிலிருந்து மனித உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது:

2013 ஏப்ரல் 3]

அறிக்கை

ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட மானாம்பள்ளி மற்றும் வால்பாறை வனச் சரகங்களுக்கு உட்பட்ட வால்பாறை பகுதியில் உள்ள தனியார் தோட்டப் பகுதிகளில் வன உயிரினங்களான காட்டு யானைகள், சிறுத்தைகள், காட்டெருமைகள் மற்றும் கரடிகள் அதிகமாக உள்ளன. இவை உணவுத் தேவைகளுக்காக வனப் பகுதிகளை விட்டு பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகள், ரேசன் கடைகள், குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் உள்ள தொழிலாளர் வீட்டுத் தோட்டப் பகுதிகளுக்குள் வன உயிரினங்களின் உணவுப் பொருளான வாழை மரங்கள், கிழங்கு வகைகள் மற்றும் பயிர் வகைகளை உண்பதற்காக ஊடுருவுகின்றன. இச்சூழ்நிலைகளில் மனிதர்களுக்கும், வன உயிரினங்களுக்கும் இடையே எதிர்பாராதவிதமாக மோதல்கள் ஏற்படுகின்றன.

2012–2013 ஆம் நிதியாண்டில் காட்டு யானை தாக்கி 2 நபர்களும், காட்டெருமை தாக்கி 2 நபர்களும், மான் தாக்கி ஒரு நபரும் ஆக மொத்தம் 5 நபர்கள் வன உயிரினத் தாக்குதலால் இப்பகுதியில் உயிரிழந்துள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	இறந்தவரின் பெயர் (திருவாளர்கள்)	நாள்	எந்த வன உயிரினத்தால் தாக்கப்பட்டார்	இதுவரை வழங்கப்பட்ட நிவாரணத் தொகை (இலட்சத்தில்)
1.	பரமன் என்ற கணபதி, வயது–52 த/பெ. கிருஷ்ணன்	5–4–2012	யானை	3.00
2.	கே. ராமன், வயது–52 த/பெ. பெருமாள்	18–7–2012	கடமான்	3.00
3.	என். சதிஷ், வயது–37	8–12–2012	யானை	3.00
4.	முத்து, வயது–37, த/பெ. செல்லமுத்து	20–2–2013	காட்டெருமை	0.25
5.	செல்லம்மாள், W/o. கிருஷ்ணகுட்டி	8–3–2013	காட்டெருமை	0.25
	மொத்தம்			9.50

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 ஏப்ரல் 3

காட்டு யானை தாக்கி உயிரிழந்த இரண்டு நபர்களுக்கும் மற்றும் கடமான் தாக்கி உயிரிழந்த ஒருவரின் குடும்பத்திற்கும் தலா ரூ.3.00 இலட்சம் வீதம் ரூ. 9.00 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

காட்டெருமை தாக்கி உயிரிழந்த இருவரின் குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக தலா ரூ.0.25 இலட்சம் வீதம் ரூ.0.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிவாரணத் தொகை, உரிய நபர்களிடமிருந்து தேவையான ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும், முழுமையாக வழங்கப்படும்.

மேலும், இப்பகுதியில் யானை தாக்கி 2 நபர்களும், கரடி தாக்கி 2 நபர்களும் காயமடைந்துள்ளனர். அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காண் நிகழ்வுகளைத் தடுக்கும்பொருட்டு, வால்பாறை பகுதியிலுள்ள எஸ்டேட் நிருவாகத்தினர், அரசு அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றவர்களைக் கொண்டு அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் 28–1–2012 அன்று தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது:–

1. தொழிலாளர் குடியிருப்புகள் மற்றும் பொதுமக்கள் நடமாடும் பகுதிகளில் சோடியம் வேப்பர் மற்றும் மின்விளக்குகள் போதிய அளவிற்கு அமைக்கப்பட வேண்டும்.

2. எஸ்டேட் நிருவாகத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள குடியிருப்புகள் தனித்தனியாக உள்ளன. அவற்றை ஒருங்கிணைந்த குடியிருப்புகளாக மாற்ற வேண்டும்.

3. எஸ்டேட் நிருவாகத்திலுள்ள ரேசன் கடைகள் அனைத்தையும் யானை தாக்குதல் பாதிப்பிலிருந்து காப்பதற்காக, கல்லால் கட்டப்பட்ட கட்டடம் அமைத்து, ரேசன் கடைகளை நடத்த வேண்டும் அல்லது நடமாடும் ரேசன் கடைகளை அமல்படுத்த வேண்டும்.

4. எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்புக்கு அருகிலுள்ள கழிவறைகள் பாதுகாப்பற்ற நிலையிலேயே உள்ளன. அவற்றை

உடனடியாக சரிசெய்வதுடன், வெளிப் பகுதிகளில் வெளிச்சம் ஏற்படுத்தும் வகையில், மின் விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.

5. எஸ்டேட் பகுதிகளில் உள்ள குறுக்குப் பாதைகள் உடனடியாக மூடப்படுவதுடன், பொதுமக்கள் அனைவரும் பிரதான சாலைகளில் மட்டுமே தங்களது போக்குவரத்தை அமைத்துக்கொள்ள எஸ்டேட் நிருவாகத்தினர் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. குடியிருப்புகளைச் சுற்றிலும் சுமார் 10 மீட்டர் தூரத்திற்கு அருகிலுள்ள தேயிலைச் செடிகள் மற்றும் முட்புதர்கள் அகற்றப்பட வேண்டும். அதேபோன்று, வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ந்துள்ள புதர்கள் மற்றும் குடியிருப்புகள், பள்ளி வளாகங்கள் போன்ற பகுதிகளில் உள்ள புதர்களை உடனடியாக அகற்ற வேண்டும்.

7. எஸ்டேட் தொழிலாளர்கள் குடியிருப்புகளைச் சுற்றிலும் நிறுவனத்தினர் செலவில் சுமார் 7 அடி உயரத்திற்கு சூரிய மின்வேலி அமைத்து, அதனை நல்லமுறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. வன உயிரினங்களால் பொதுமக்கள் உயிர் மற்றும் உடைமைகளுக்கு இழப்பு ஏற்படுவதற்கு வனத் துறையினரால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இருப்பினும், எஸ்டேட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எஸ்டேட் நிருவாகத்தினராலும் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ஏதுவாக அவர்கள் கட்டுப்பாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு உயிர்க் காப்பீடு எடுத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. பள்ளிக் குழந்தைகள் பள்ளி நேரம் முடிந்தவுடன் அவர்கள் பாதுகாப்பாக தங்களது இல்லங்களுக்குச் சென்றுள்ளார்களா என்பது குறித்து தலைமை ஆசிரியர்/ஆசிரியை ஆகியோர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

10. எஸ்டேட் பகுதிகளில் மாமிசக் கழிவுகளை குழிதோண்டிப் புதைக்க மாமிசக் கடை நடத்துபவர்களுக்கு தக்க அறிவுரை வழங்குவதுடன், இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை நிருவாகத்தினர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

11. இதேபோல், வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இறைச்சிக் கடை நடத்துபவர்களுக்கு இறைச்சிக் கழிவுகளை

பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கு வால்பாறை நகராட்சியினரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

செய்யக் கூடாதவை:–

1. பொதுமக்கள் தங்களது கால்நடைகளை இரவு நேரங்களில் தொழுவத்தில் அடைக்காமல் அப்படியே விட்டுவிடக்கூடாது. அவற்றை பாதுகாப்பாக தொழுவத்தில் மட்டுமே அடைக்க வேண்டும்.

2. கால்நடைகளை வேட்டையாட வரும் வன உயிரினங்களால் பொதுமக்கள் உயிருக்கும், உடமைக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நாய், பூனை, கோழி மற்றும் ஆடுகளை வீட்டில் வளர்ப்பதைத் தவிர்க்கவும்.

3. பொதுமக்கள் யாரும் வனப் பகுதிக்குள் அனுமதியின்றி செல்லக்கூடாது.

4. இரவு நேரங்களில் பொதுமக்கள் யாரும் வன உயிரினங்கள் நடமாடும் பகுதிகளுக்குத் தனியாகச் செல்லக்கூடாது.

5. குழந்தைகளை தனியாக தேயிலைத் தோட்டப் பகுதிகளில் பகல் மற்றும் இரவு நேரங்களில் விளையாட அனுமதிக்கக்கூடாது.

6. பொதுமக்கள் வீடுகளில் மாமிசம் எடுத்து உபயோகிக்கும்போது அதன் கழிவுகளை வீட்டிற்கு அருகில் வீசக்கூடாது. அவ்வாறு வீசும்பொழுது வன உயிரினங்கள் அதனை உண்பதற்காக குடியிருப்புப் பகுதிக்கு வர வாய்ப்புள்ளது.

7. பொதுமக்கள் தங்களது வீட்டிற்கு அருகிலுள்ள புதர்கள் மற்றும் வாழை மரங்களை அகற்ற வேண்டும்.

8. குழந்தைகளை பள்ளி மைதானங்களில் தனியாக விளையாடுவதற்கு அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு விளையாடும்போது ஆசிரியர் ஒருவரின் மேற்பார்வையில் விளையாட அனுமதிக்க வேண்டும்.

9. இரவு நேரங்களில் வால்பாறை மற்றும் எஸ்டேட் பகுதிகளில் மது அருந்தி பொதுமக்கள் தனியாக நடமாடக் கூடாது.

10. சாலையோரங்களில் காணப்படும் வன உயிரினங்களுக்கு உணவுக் கழிவுகளையோ அல்லது உணவையோ வழங்கக் கூடாது.

2013 ஏப்ரல் 3] [திரு. கே.டி. பச்சைமால்]

11. வன உயிரினங்கள் நடமாட்டம் தெரிந்தால், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு வனத் துறையின் உதவியின்றி தனியாகச் செயல்படக்கூடாது.

வன உயிரினங்களின் நடமாட்டத்தைக் கண்காணித்துக் கட்டுப்படுத்த வனத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்:

1. வால்பாறை பகுதிகளில் மனித உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சமூக ஆர்வலர்கள், சுய மகளிர் குழு மற்றும் வன அலுவலர்களைக் கொண்ட வன உயிரின பாதுகாப்புக் குழு ஒன்று அமைத்து செயல்பட்டு வருகிறது.

2. வால்பாறை பகுதியிலுள்ள தனியார் தோட்டப் பகுதிகளில் நடமாடும் வன உயிரினங்களைக் கண்காணிக்க ஏதுவாக, இரண்டு மினி வாகனங்கள் பெறப்பட்டு வன உயிரினங்கள் பொதுமக்கள் இருப்பிடத்திற்கு அருகில் நடமாடும் பகுதிகளைக் கண்காணித்து, வனத்திற்குள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. ஆதிவாசி இளைஞர்களை தற்காலிக வேட்டைத் தடுப்புக் காவலர்களாக நியமித்து அவர்களின்மூலம் வன உயிரினங்கள் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு, அவற்றை வனத்திற்குள் விரட்டுவது, இதுகுறித்து முன்கூட்டியே பொதுமக்களுக்கும் தெரிவிக்கப்பட்டு வருவதால், வன உயிரினங்கள் மற்றும் பொதுமக்களுக்கு, உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் ஏற்படுவது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

4. மனித வன உயிரின மோதலைத் தடுக்கும்பொருட்டு, பொதுமக்கள் வாழும் இடத்திற்கு அருகிலுள்ள காப்புக் காடுகளில் ரூ.225.80 இலட்சம் செலவில் 130 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ரூ.6.03 இலட்சம் செலவில் 53.80 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்வேலிகளின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ரூ.83.09 இலட்சம் செலவில் 40 கி.மீ. நீளத்திற்கு யானை புகா அகழி அமைக்கப்பட்டுள்ளதுடன், ரூ.1.32 இலட்சம் செலவில் 6 கி.மீ. நீளத்திற்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள யானை புகா அகழியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 ஏப்ரல் 3

5. மேலும், வன உயிரினங்களின் நடமாட்டம் உள்ளதை முன்கூட்டியே கண்டறியக்கூடிய (Early Warning Alert System) தொழில்நுட்பக் கருவி 30 இடங்களில் நிறுவப்பட்டு, அதனை பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வால்பாறை பகுதியில் ஏற்படும் மனித வன உயிரின மோதலைக் கட்டுப்படுத்த ஆசிய யானைகள் திட்டத்தின் கீழ், 2011–2012 ஆம் நிதியாண்டில், 222.285 இலட்சம் தொகையினை அரசு விடுவித்துள்ளது. அதில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, மனித–வன உயிரின மோதல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்த கவன ஈர்ப்பிற்கு விவரமான அறிக்கை இங்கே மேசையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை முழுவதும் படித்துப் பார்த்தேன். ஆனாலும், இன்றைக்கு காட்டு யானைகள், காட்டெருமைகள், கரடி, கடமான்கள்கூட மனிதர்கள்மேல் பாய்கின்றன. அந்த அளவிற்கு இன்றைக்கு வன விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதால், காடுகளில் சரியான உணவும், குடிநீரும் இல்லாத நிலையில், காட்டுப் பகுதிகளில் பல்வேறுவிதமான ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அவை எல்லையைத் தாண்டி, இன்று மனிதர்கள் வாழக்கூடிய குடியிருப்புகளுக்குள் புகுந்து, திடீர், திடீரென்று தாக்குதலை நடத்துகின்றன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரும் என்று சொன்னால்கூட அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால், எந்த நேரத்தில் தாக்குதலை நடத்தும், குடியிருப்புகளுக்குள் புகும் என்று தெரிவதில்லை. இதற்கு முன்னால்கூட காட்டு யானைகள் கட்டடங்களுக்குள் புகுந்தால், அவை தெரு வழியே சென்றுவிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், சமீபத்தில் ஒரு பத்திரிகையில் படித்தேன். காட்டு யானை ரேஷன் கடையை உடைத்து உள்ளே இருக்கின்ற அரிசியையெல்லாம் எடுத்துச் சாப்பிட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், அறிக்கையில் இருப்பதிலிருந்து கேள்வி கேளுங்கள்.

திரு. சு. குணசேகரன்: எனவே, இந்த அளவிற்கு உணவிற்காக வன விலங்குகள் எல்லையைத் தாண்டி மனிதர்களைத் தாக்குவதும், குடியிருப்புகளை சேதப்படுத்துவதும், கடைகளை உடைப்பதுமாக, அவற்றினுடைய அட்டகாசம் அதிகரித்திருக்கின்ற நிலையில், வன விலங்குகளைப் பாதுகாக்கிறோம் என்ற அடிப்படையில், அவை எல்லையைத் தாண்டி வருவதைத் தடை செய்வதற்கு எந்தவிதமான ஒரு திட்டமும் இல்லாத காரணத்தால், வால்பாறை எஸ்டேட் மற்றும் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மலைப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு வன விலங்குகளால் மிகப் பெரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஆனாலும், உயிரிழப்புகள் ஏற்படுகின்ற இந்த நேரத்தில், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட ஒரு நபருக்கு, உயிரிழந்தவருக்கு 3 இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், விவாதம் மாதிரி விரிவாகப் பேச வேண்டாம். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சு. குணசேகரன்: இருந்தாலும், விலை மதிப்பற்ற உயிரிழப்பு, அந்தக் குடும்பத்திற்கு மிகப் பெரிய பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே, வன விலங்குகள், குடியிருப்புகளுக்கு வராதவண்ணம், இங்கே விவர அறிக்கையில் பல விவரங்கள் தெரிவித்திருந்தாலும், அவற்றைச் செயல்படுத்தி, இனிமேல் வன விலங்குகள் எல்லையைத் தாண்டி வராமல் இருப்பதற்கான சரியான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

[திரு. கே.டி. பச்சைமால்] [2013 ஏப்ரல் 3

ஆட்சி அமைந்தபிறகு, மனிதர்களுக்கும், வன உயிரினங்களுக்குமிடையே எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற மோதல்களையெல்லாம் தவிர்க்கின்றவண்ணம் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். 1992 ஆம் ஆண்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காப்புக் காட்டிலே வன விலங்குகளுக்கு நீராதாரத்தைப் பெருக்கும்பொருட்டு, நீர்நிலைத் தொட்டிகள் கட்ட ஆணையிட்டு, அதன்படி தமிழகத்தினுடைய வனப் பகுதிகளிலே நீர்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வால்பாறை பகுதியிலே உள்ள ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கென தனியாக மனித–வன உயிரின மோதல்களைத் தடுக்கும்பொருட்டு, அரசாணை எண் 90, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 14–3–2012–ல் ரூ.222.28 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய மின்வேலி அமைத்தல், யானை புகா அகழிகள் அமைத்தல், யானைகள் வருவதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளும் கருவிகள் பொருத்துதல், மனித–வன உயிரின மோதலைத் தவிர்க்க அமைக்கப்பட்ட குழுவிற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், மனித–வன உயிரின மோதலைத் தவிர்க்க அமைக்கப்பட்ட குழுவிற்குத் தேவையான பயிற்சி வழங்குதல், வன உயிரினங்களுக்குத் தேவையான தீவனப் பயிர்களை வளர்த்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்குச் செயல்படுத்தி வருகின்றது.

வால்பாறை பகுதியைப் பொறுத்தவரையில், 2011–2012 ஆம் ஆண்டு 29 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டது. 2012–2013இலே 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டது. அதேபோல், யானைகள் புகா அகழிகள் வெட்டுவதைப் பொறுத்தவரையில், 2012 ஆம் ஆண்டு 14 கிலோ மீட்டர் தூரத்திற்கும், 2012–2013 ஆம் ஆண்டு 21 கிலோ மீட்டர் தூரத்திற்கும், இந்த 2013–2014 ஆம் ஆண்டிலே 20 கிலோ மீட்டர் தூரத்திற்கும் வெட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டு சுமார் 20.87 கோடி ரூபாய் செலவில் வனத்தில் இருக்கின்ற யானை போன்ற மிருகங்கள் வெளியிலே வராமல் இருப்பதற்கு, தீவன மரங்களை வளர்த்தல் போன்ற பல்வேறு திட்டங்களுக்காக ரூ.20.87 கோடி நிதியை ஒதுக்கி அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.